20-03-2013 Dinamalar



கோயம்பேடு, மெட்ரோ ரயில் துணை மின் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள, 'சுவிட்ச் கியர்' இயந்திரங்கள்.

# கோயம்பேடு மெட்ரோ ரயில் துணை மின் நிலையத்தில் நவீன 'சுவிட்ச் கியர்' இயந்திரம்

சென்னை, மார்ச் 20-

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான மின்சாரம் வழங்குவதற்கு, கோயம்பேட்டில் அமைக்கப்படும் துணை மின் நிலையத்தில், 'சுவிட்ச் கியர்' நவீன இயந்திரங்கள் நேற்று பொருத்தப்பட்டன.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கு, கோயம்பேடு-யார்டு, ஆலந்துார் மற்றும் சென்ட்ரல் நிலையங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

கோயம்பேடு மெட்ரோ ரயில் துணை மின் நிலையத்திற்கு, கடந்தாண்டு டிசம்பர் மாதம், குஜராத் மாநிலம் வதோதராவிலிருந்து, 203 கி.வா., திறன் கொண்ட, இரண்டு மின்மாற்றிகள் கொண்டு வரப்பட்டு, நிர்மாணிக்கும் பணி நடந்து வந்தது.

இப்பணி முடிந்துள்ளதால், இந்த துணை மின் நிலையத்திற்கு மின்சார வாரியம் மூலம் பெறப்படும் மின்சாரத்தை, மெட்ரோ ரயில் திட்டதிற்கு தேவையான பகுதிகளுக்கு பிரித்து வழங்குவதற்கு ஏதுவாக, நவீன 'சுவிட்ச் கியர்' இயந்திரங்கள் அமைக்கும் பணி நடந்து வந்தது.

மின்சார வாரியம் மூலம், கோயம்பேடு மெட்ரோ ரயில் துணை மின் நிலையத்திற்கு இந்த இயந்திரம் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது.

இதில் இருந்து மின்மாற்றிகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றின் மூலம், கோயம்பேடு யார்டுக்கும், தலைமை நிர்வாக அலுவலகம் மற்றும் மெட்ரோ ரயில் பாதைக்கும் தேவையான மின்சாரத்தை அனுப்ப முடியும்.